# DIOCESAN CIRCULAR LETTERS

No.C.18/2025 01.09.2025

## ‘இறைமக்கள் பேரவை 2024’ன் கொள்கைகள், தீர்மானங்கள், பரிந்துரைகள்

**அன்பிற்கினிய சகோதரிகளே, சகோதரர்களே,**

மூவொரு இறைவனின் அன்பும் அருளும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக! நவம்பர் 2023 தொடங்கி நவம்பர் 2024 வரை நடைபெற்ற இறைமக்கள் பேரவையின் கொள்கைகள், தீர்மானங்கள், பரிந்துரைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய இறுதி ஆவணத்தை நான் கடந்த ஆகஸ்டு 15, அன்னை மரியாவின் விண்ணேற்பு பெருவிழா அன்று புனித சவேரியார் பேராலயத்தில் வெளியிட்டதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ‘**நிறைவாழ்வை நோக்கி இணைந்து பயணிக்கும் கோட்டாறு திருஅவையாக**’ என்னும் இலக்கோடு வெளிவந்திருக்கும் இந்த இறுதி ஆவணத்தில் இடம்பெற்றிருப்பவை வருகின்ற **ஜனவரி 01, 2026** முதல் நமது கோட்டாறு மறைமாவட்டத்தின் நடைமுறைகளாகக் கடைபிடிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நடைமுறைகளை இறைமக்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் விதமாக **செப்டம்பர் 21, 28, அக்டோபர் 5, 12** ஆகிய நான்கு ஞாயிற்றுக்கிழமைகளில் **திருப்பலியின் அறிவிப்பு நேரத்தில்** இறைமக்கள் பேரவையின் இறுதி ஆவணத்தில் இடம்பெற்றிருக்கும் கொள்கைகள், தீர்மானங்கள், பரிந்துரைகள் ஆகியவை வாசிக்கப்படும். **இறைநம்பிக்கை வாழ்வு, உறவும் உரையாடலும், பங்கேற்பு அமைப்புகளும் நிர்வாகமும், திருஅவையிலும் குடிமைச் சமூகத்திலும் நமது ஈடுபாடு** என்னும் நான்கு மையத் தலைப்புகளின் கீழ் இடம்பெறும் நடைமுறைகளை ஒவ்வொரு வாரமாக அருள்பணியாளர் பங்கு மக்களுக்கு அறிவிப்பார்.

இறைமக்கள் பேரவை 2024 ஏடானது அருள்பணியாளர்கள், எல்லாப் பங்கேற்பு அமைப்புகளின் மறைமாவட்ட, மறைவட்ட பொறுப்பாளர்கள் ஆகிய அனைவருக்கும் வழங்கப்படும். ஏனைய நபர்கள் இந்த ஏட்டை பெற விரும்பினால் மறைமாவட்ட அருள்பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பு அலுவலகத்திலோ அசிசி புத்தக நிலையத்திலோ ரூபாய் 50 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

நிறைவாழ்வை நோக்கி இணைந்து பயணிக்கும் கோட்டாறு திருஅவையாக நாம் வளரவும் கிறிஸ்துவுக்கு சான்றுபகரவும் இந்நடைமுறைகள் துணைநிற்கும் என நம்புகின்றேன். இணைந்த

பயணத்தில் உங்கள் ஒவ்வொருவரின் பங்கேற்பையும் பங்களிப்பையும் தொடர்ந்து வழங்குமாறு வேண்டுகின்றேன்.

நம்மைத் தொடர்ந்து புதுப்பிக்கும் தூய ஆவியாரின் வழிநடத்துதலும் அன்னை மரியாவின் அருள்துணையும் நம்மோடு இருப்பதாக!

*கிறிஸ்துவின் மனநிலையில்,*

Sd/-

**ஆயர் நசரேன் சூசை**

கோட்டாறு மறைமாவட்டம்

---

**குறிப்பு :** இச்சுற்றுமடல் நமது மறைமாவட்டத்தின் அனைத்து ஆலயங்களிலும் நிறுவனங்களிலும் **செப்டம்பர் 14, ஞாயிற்றுக்கிழமை** அன்று **திருப்பலி அறிவிப்பு நேரத்தில்** வாசிக்கப்பட வேண்டும்.

---

## A NEW RELIGIOUS COMMUNITY OF PRIESTS – WELCOME!

We are pleased to announce that the Friars of the Order of Preachers (Dominicans) have established a community at North Konam in Konam Parish on September 18, 2025.

The Diocese of Kottar joyfully welcomes the Dominican Friars and assures them of our prayerful support. May their presence enrich the spiritual life of our faithful and strengthen the mission of the Church in our midst.

**Fr. G. Maria Gladston**
Chancellor, Diocese of Kottar

---

## Important Days of October 2025

**2nd October**
International Day of Non-Violence

**11th October**
International Day of the girl Child

**13th October**
Indigenous People Day

**24th October**
United Nations Day